Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, SEPTEMBER 9, 2025

செவ்வாய்க்கிழமை 09, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர்: 046 பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



“மலையக அதிகார சபை மீது

# கை வைக்க வேண்டாம்”

## ஜனாதிபதி அனுரவுக்கு மனோ கடிதம்

2018ம் வருட 32ம் இலக்க சட்டத்தின் மூலம் நாம் எமது நல்லாட்சி காலத்தில் போராடி பெற்று உருவாக்கிய, “மலையக அதிகார சபை” என எம்மால் அறியப்படும் “பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை” மூடி விட, உங்கள் அரசாங்கத்தால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாக கை விடுங்கள், என ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு எழுதி அனுப்பி உள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நுவரெலியா, கொழும்பு அவிசாவலை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, பதுளை, மொனராகலை, காலி, மாத்தறை, குருநாகலை, ஆகிய மாவட்ட பெருந்தோட்ட பிராந்தியங்களில் வாழும் வாழும், மலையக தமிழ் மக்கள் சமூக, பொருளாதார, கலாச்சார, வளர்ச்சிகளில் வளர்ச்சி குன்றிய பிரிவினர் என்பதை புள்ளி விபரங்கள காட்டுகின்றன.

தொடர்ச்சி P2



# லான்சாவுக்கு பிணை: ரணவீரவுக்கு நீடிப்பு

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் விளக்கமறியல் மஹர நீதவான் நீதிமன்ற நீதவான் ஜனிதா பெரேரா, செப்டெம்பர் 22 ஆம் திகதி வரை திங்கட்கிழமை (08) நீடித்துள்ளார்.

போலி ஆவணங்களை தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை 2010 ஆம் ஆண்டில் விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த பிரசன்ன ரணவீர, பல நாட்கள் தலைமறைவாகியிருந்து மே மாதம் 07 ஆம் திகதி நீதிமன்றில் சரணடைந்தார். அன்றிலிருந்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## கந்தானை வீட்டில் இருந்து ஐஸ் இரசாயனம் மீட்பு

கந்தானை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஐஸ் போதைப்பொருள் தயாரிக்க பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மித்தெனியவில் மீட்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மற்றொரு இரசாயனப் பொருளே கந்தானையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை குற்றவியல் பிரிவிற்கு ஞாயிற்றுக்கிழமை (07) மாலை கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வீட்டை சோதனையிட்டபோது, வீட்டின் உள்ளேயும், வீட்டின் முன்புறமும் குவிக்கப்பட்டிருந்த இரசாயனப் பொருட்களை கண்டறிந்தனர்.

தொடர்ச்சி P2

## "புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விக்கு நிதி"

வெளிநாட்டில் இறக்கும், ஊனமுற்ற மற்றும் வெளிநாடுகளில் காணாமல் போதல் உள்ளிட்ட பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் இலங்கையர்களின் பிள்ளைகளின் கல்வியைப் பாதுகாப்பதற்காக புலமைப்பரிசில் திட்டமொன்றைச் செயல்படுத்த ஜனாதிபதி நிதி திட்டமிட்டுள்ளது.

“கல்வியில் யாரையும் கைவிடக் கூடாது” என்ற எண்ணக் கருவின் பிரகாரம் ஜனாதிபதி நிதியம்,வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

தொடர்ச்சி P2

## இந்தியாவில் இலங்கை தமிழர்கள் நீண்ட கால விசா கோர முடியாதாம்

இலங்கையில் உள்நாட்டுப் போர் நடந்தபோது பலர் அங்கிருந்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் மீது எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று மத்திய அரசு கடந்த வாரம் தான் அறிவித்திருந்தது. இருப்பினும், இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவில் நீண்ட கால விசா கோரி விண்ணப்பிக்க முடியாதாம். இது தொடர்பாகச் சில முக்கிய தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் பல ஆண்டுகள் உச்சத்தில் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் இலங்கையில் இருந்து பல ஆயிரம் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார்கள். போர்ச் சூழல் காரணமாக வேறு வழியில்லாமல் அவர்கள் தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறி சட்டவிரோதமாகத் தமிழகம் வந்தடைந்தனர்.

இருப்பினும், அவர்கள் அகதிகள் முகாமிலேயே தங்க வேண்டி இருந்தது. மேலும், அவர்கள் சட்டவிரோதமாக நாட்டில் நுழைந்தவர்கள் என்பதால் சட்டவிரோதக் குடியேறிகளாகவே கருதப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## கைக்குழந்தையுடன் கடலில் விழுந்த தாய்

### சேய் மாயம்: தாய் மீட்பு

கொள்ளுப்பிட்டி கடலில் ஞாயிற்றுக்கிழமை (7) மாலை 3.30 மணியளவில் கடலில் விழுந்து ஒரு வயது மற்றும் இரண்டு மாதக் குழந்தை காணாமல் போனதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் விழுந்த தாய் மீட்கப்பட்டார். மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## தென்னகோனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கான தீர்மானம் அரசியலமைப்பிற்கு முரணானது என தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுமீதான விசாரணை உயர் நீதிமன்றத்தால் திங்கட்கிழமை (08) ஒத்திவைக்கப்பட்டள்ளது.

தொடர்ச்சி P2

பொகவந்தலாவையில்

## ஐஸூடன் இருவர் கைது




செ.தி.பெருமாள்


பொகவந்தலாவ பகுதியை சேர்ந்த இருவர் ஐஸ் போதைப் பொருளுடன் நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து தலா 170 மில்லி கிராம் ஐஸ் எனும் போதைப் பொருள் கைப்பற்றபட்டுள்ளது.

அரச புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலுக்கு அமைய

தொடர்ச்சி P2

## “எதிரணியின் கனவாகும்”



பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்ற ஊகங்களை மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பொதுச் செயலாளர் டில்வின் சில்வா நிராகரித்தார்.

பொதுக் கூட்டத்தில் பேசிய சில்வா, நீண்ட காலமாக ஆதாரமற்ற கூற்றுகளை எதிர்க்கட்சி பரப்பி வருவதாகவும், ஆனால் அவை எதுவும் நிறைவேறவில்லை என்றும் கூறினார்.

தொடர்ச்சி P2




## ஆணுறை மோதல்

இலங்கையின் பாசாலைப் பாடத்திட்டத்தில் ஆணுறை பயன்பாட்டை கற்பிப்பதற்கான திட்டங்கள் தொடர்பாக சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சகங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2




## 83 கடவுச்சீட்டுகளுடன் ஆண், பெண் கைது

வேறு நபர்களுக்குச் சொந்தமான 83 கடவுச்சீட்டுகளை சட்டவிரோதமாக வைத்திருந்தனர் என்றக் குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## இணைந்து பணியாற்ற ஐ.தே.க முடிவு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகளுடன் தொடர்ந்து பணியாற்றுவதற்கு முடிவு செய்துள்ளது.

எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற குழுவை நியமித்தல் அல்லது இதே போன்ற பொறிமுறையின் மூலம் பணியாற்றவும் ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நீதியரசர் துரைராஜா நீதிச் சேவைக்கு நியமனம்



உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.துரைராஜா நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப் பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி முர்து பெர்னாண்டோ சேவையில் இருந்து ஓய்வு பெற்றதைத்தொடர்ந்து ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்கு ஜனாதிபதியால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்,ஜனாதிபதி சட்டத்தரணி எஸ். துரைராஜா 1988ஆம் ஆண்டு சட்டத்தரணியாகப் பதவியேற்றார்.அதனைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு அரச தரப்பு சட்டத்தரணியாக இணைந்து கொண்டார். அதன் பின்னர் மேலதிக சொலிட்டர் ஜெனராலாக பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியால் எஸ். துரைராஜா ஜனாதி பதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டு அதே ஆண்டு மேன்முறையீட்டு நீதியரசராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கை வைக்க வேண்டாம்”

இது 200 வருட சாபம். இதற்கு காரணம், இந்த சமூகம் இந்நாட்டின் தேசிய வரம்புக்குள் கொண்டு வர படாமல் இன ரீதியாக ஒதுக்கி வைக்க பட்டமை ஆகும். இதற்கு காரணம், இவர்கள் அந்நியர்கள், இவர்கள் தமிழர்கள், இவர்களுக்கு காணி வழங்க கூடாது, வீடு வழங்க கூடாது, தேசிய கல்வி கட்டமைப்புகள் கொண்டு வர கூடாது, தேசிய சுகாதார கட்டமைப்புகள் கொண்டு வர கூடாது, பிரஜா உரிமை வழங்க கூடாது, என எம்மீது காட்ட பட்ட, காட்ட படும் இனவாதம்தான்.

200 வருட ஒடுக்கு முறையில் இருந்து மெல்ல, மெல்ல மீண்டு வரும் இந்த சமூகத்தின், கல்வி தரும் பாடசாலைகள், 1976ம் ஆண்டிலேயே தேசிய கல்வி கட்டமைப்புக்குள் கொண்டு வர பட்டன. கடைசி தொகுதி குடியுரிமையும் 2003ம் ஆண்டிலேயே வழங்க பட்டு முழுமை அடைந்தது. ஆகவே தேசிய வளர்ச்சி பாதையில் நாம் தாமதமாகவே நடக்க ஆரம்பித்தோம். இதனால், இந்த சமூகம், பின்தங்கிய சமூகமாக இன்றும் இருக்கிறது.

இந்த இன ஒதுக்கல், கொள்கையை இந்நாட்டில் அனைத்து பெரும்பான்மை கட்சிகளும் முன்னெடுத்தன. இந்த சூழலில், இதை கணக்கில் எடுத்தே 2015ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை பதவியில் இருந்த அன்றைய நல்லாட்சி அரசில், தமிழ் முற்போக்கு கூட்டணியினராகிய நாம் பல்வேறு நல திட்டங்களை முன்னெடுத்தோம். அதுவரை மறுக்க பட்டு வந்த அல்லது உதாசீனம் செய்ய பட்டு வந்த, காணி உரிமை, வீட்டு உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை ஆகியவற்றை பெற்று எடுக்கும் பெரும் பணியை நாம் ஆரம்பித்தோம்.

இவற்றை வெறும் ஒரு துறை சார்ந்த அமைச்சினால் மட்டும் செய்ய முடியாது. அமைச்சுகளுக்கு மேலாக, பல்வேறு துறை சார்ந்த அமைச்சுகளின் பணிகள் கூட்டி இணைக்க பட வேண்டும். இந்த பிரதான தேவை பின் புலத்தில், மலையக மக்களின் விசேட குறைதீர் (Affirmative Policy) கொள்கை தேவை அடிப்படையில் உருவாக்க பட்ட நிறுவனமே, மலையக அதிகார சபை ஆகும்.

நீங்கள் இன்று இதை, ஒரு அமைச்சின் அங்கமாக மாற்ற முயல்கிறீர்கள். அமைச்சு என்பதும் அதன் நடவடிக்கைகளும், நாட்டின் ஜனாதிபதியால் தீர்மானிக்க படுகின்றன. நாளை குறிப்பிட்ட அமைச்சு இல்லாமல் போகுமானால், அந்த அமைச்சின் அங்கமும் காணாமல் போய் விடும். ஆனால், அமைச்சரவையில் தீர்மானிக்க பட்டு, பராளுமன்றத்தில் ஒப்புதல் பெற பட்டு, சட்டம் மூலமாக உருவாக்க பட்ட திணைக்களங்கள், அதிகார சபைகள், என்பன அமைச்சுகள், அரசாங்கங்கள் மாறுகின்ற காரணத்தால், மாறி விடாது. காணாமல் போய் விடாது. இந்த அடிப்படை உண்மையை நீங்கள் புரிந்து கொண்டு, இந்த முயற்சியை நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி அவர்களே, நீங்கள் ஆட்சியை பொறுப்பு ஏற்று இம்மாதத்துடன் ஒரு வருடம் நிறைவு பெருகிறது. வாழ்த்துக்கள். மலையக மக்களுக்கு நிறைய வாக்குறுதிகளை வழங்கி உள்ளீர்கள். ஆனால், இந்த ஒரு வருடத்தில் சொல்லி காட்ட, எடுத்து காட்ட, மலையக பிராந்தியத்துக்கு உங்கள் அரசாங்கம் காத்திரமாக எதுவும் செய்து விட வில்லை. ஆனாலும், நாம் பொறுமையாக காத்திருக்கிறோம். நீங்கள் எதுவும் செய்ய வில்லை. என்பதை விட, இன்று, இருப்பதையும் பிடுங்கி எடுக்க முயல்கிறீர்கள். அதையும் நாம் பொறுமையாக ஏற்று கொண்டு இருக்க முடியாது என்பதை உங்கள் மேலான கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

நீங்கள் செய்ய முயலும் இந்த காரியத்தின் பாரதூர தன்மையை தெரிந்து கொண்டா, அல்லது தெரியாமலா, நீங்கள் செய்கிறீர்கள் என எனக்கு விளங்கவில்லை. எதுவாக இருந்தாலும், 2018ம் வருட 32ம் இலக்க சட்டத்தின் மூலம் நாம் எமது ஆட்சி காலத்தில் போராடி பெற்று உருவாக்கிய, “மலையக அதிகார சபை” என எம்மால் அறியப்படும் “பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை” மூடி விட, உங்கள் அரசாங்கத்தால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாக கை விடுங்கள் என கோருகிறேன்.

# “எதிரணியின் கனவாகும்”

“முன்னதாக, ஹரிணி அமரசூரிய தனது அமைச்சர் பதவியை இழப்பார் என்று அவர்கள் கூறினர்
இப்போது அவர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்று கூறுகின்றனர். இவை அவர்களின் கனவுகளே தவிர வேறு ஒன்றும் இல்லை,” என்று அவர் கூறினார்.

# "புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விக்கு நிதி"

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை விரிவுபடுத்துவது குறித்த கலந்துரையாடல் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரின் தலைமையில் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே இந்த திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் இலங்கை தொழிலாளர்களுடைய இங்கிருக்கும் பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை உறுதிப்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட நபர் இலங்கையர் என்பது மாத்திரமே அளவுகோளாக கருத்திற்கொள்ளப்படுவதோடு குறித்த, புலமப்பரிசில் வழங்குவதற்கான பொருத்தமான வழிகாட்டுதல்கள் எதிர்வரும் தினங்களில் வெளியிடப்பட உள்ளன .

காட்டு யானைகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் பிள்ளைகளுக்கு இதேபோன்ற புலமைப்பரிசில் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இதை மேலும் பல துறைகளுக்கும் விரிவுபடுத்த ஜனாதிபதி நிதியம் எதிர்பார்க்கிறது.

# கைக்குழந்தையுடன் கடலில் விழுந்த தாய்

கணவருடனான தகராறில், அந்தப் பெண் தனது குழந்தையுடன் வெலிமடைப் பகுதியிலிருந்து கொள்ளுப்பிட்டிக்கு வந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண்ணின் கணவர் நுவரெலியா பகுதியில் உள்ள ஒரு பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் ஒரு பொலிஸ் அதிகாரி என்பது தெரியவந்துள்ளது.

அந்தப் பெண், குழந்தையுடன் கடலில் குதித்து தற்கொலைக்கு முயன்றாரா அல்லது அந்தப் பெண் தனது குழந்தையை கடலில் வீசிவிட்டாரா என்பதைத் தீர்மானிக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆணுறை மோதல்

தகவல் அறிந்த வட்டாரங்களின்படி, ஆணுறை பயன்பாடு உள்ளிட்ட எச்.ஐ.வி தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் திட்டத்தை சுகாதார அமைச்சின் அதிகாரிகள் முன்வைத்த போதிலும், தற்போதைய கல்வி சீர்திருத்தங்களை மேற்கோள் காட்டி இந்த நடவடிக்கையை கல்வி அமைச்சு தாமதப்படுத்தியதாக கூறப்படுகிறது.

சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் தொற்று/எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் சமீபத்தில் ஆணுறை பயன்பாடு, முன்-வெளிப்பாடு தடுப்பு (PrEP) மற்றும் பிந்தைய-வெளிப்பாடு தடுப்பு (PEP) உள்ளிட்ட எச்.ஐ.வி மற்றும் பாலியல் ரீதியாக பரவும் தொற்று (STI) தடுப்பு நடவடிக்கைகளை மாணவர்களுக்கு முறையாக அறிமுகப்படுத்த பரிந்துரைத்தது.

அதன்படி, தற்போதைய பாடத்திட்டத்தில் உள்ள இடைவெளிகளைக் குறைக்க வயதுக்கு ஏற்ற, சான்றுகள் அடிப்படையிலான அறிவை வழங்கும் நோக்கத்துடன், 10 ஆம் வகுப்பு அறிவியல் பாடப்புத்தகத்தில் இந்தத் தடுப்பு நடவடிக்கைகளைச் சேர்க்க தேசிய கல்வி நிறுவனம் (NIE) திட்டங்களை வரைந்துள்ளது.

இருப்பினும், இந்த நடவடிக்கை இரு அமைச்சுகளுக்கு இடையில் ஒரு இழுபறியைத் தூண்டியுள்ளது. சீர்திருத்தங்களுக்கு சுகாதார அமைச்சு, அழுத்தம் கொடுக்கிறது, அதே நேரத்தில் உள்ளடக்கத்தின் நோக்கம் மற்றும் கட்டமைப்பு குறித்து கல்வி அதிகாரிகள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள்.

தேசிய எய்ட்ஸ் கவுன்சிலின் IEC, ஆணுறை மேம்பாட்டுக் குழுவின் சமீபத்திய மதிப்பாய்வு “தற்போதைய பாடத்திட்டத்தில் கடுமையான குறைபாடுகளை” எடுத்துக்காட்டுகிறது என்று சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார், முக்கிய தடுப்பு உத்திகள் குறித்து மாணவர்கள் போதுமான அளவு தெளிவில்லை என்பதையும் வலியுறுத்தினார்.

# இந்தியாவில் இலங்கை தமிழர்கள் நீண்ட கால விசா கோர முடியாதாம்

ஆனால், இலங்கைத் தமிழர்களுக்குக் குடியுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர்களைச் சட்டப்பூர்வ இந்தியக் குடிமக்களாகக் கருத வேண்டும் என்றும் தமிழகத்தில் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்தச் சூழலில் தான் கடந்த சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசு மிக முக்கியமான ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதாவது 2015 ஜனவரி 9ம் தேதிக்கு முன்பு இலங்கையில் இருந்து உரிய ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவுக்குள் நுழைந்து, அரசிடம் அகதிகளாகப் பதிவு செய்த இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதக் குடியேறிகளாகக் கருத மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சட்டப்பூர்வமாகத் தங்குவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருந்தது.

இது இலங்கைத் தமிழர்களுக்கு மிக முக்கியமான ஒரு அறிவிப்பாகப் பார்க்கப்பட்டது. இந்தச் சூழலில் தான் இப்போது இன்னொரு முக்கிய தகவல் வெளியாகி இருக்கிறது. அதாவது சட்டவிரோதமாக இந்தியா வந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாது என்ற போதிலும் ஆவணமற்ற இலங்கைத் தமிழ் அகதிகள், LTV நீண்ட கால விசா கோரி விண்ணப்பிக்க முடியாது என்று ஒரு மூத்த அரசு அதிகாரி தி இந்து ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மூத்த அரசு அதிகாரி ஒருவர், “மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவிப்பு இருந்தாலும் கூட அவர்கள் நீண்ட கால விசா பெற உதவாது. அதற்கு அவர்கள் தகுதி பெற மாட்டார்கள்” என்றார். அதேநேரம் எதனால் இலங்கை அகதிகள் நீண்ட கால சாவுக்குத் தகுதி பெற மாட்டார்கள் என்பது குறித்து அவர் கூடுதல் தகவல் எதையும் பகிர்ந்து கொள்ளவில்லை.

# லான்சாவுக்கு பிணை: ரணவீரவுக்கு நீடிப்பு

இந்நிலையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவை 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் திங்கட்கிழமை (08) உத்தரவிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் நடத்துதல் மற்றும் ஆயுதங்களை பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நிமல் லான்சா நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் ஆகஸ்ட் 29 ஆம் திகதி சரணடைந்ததையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

# இணைந்து பணியாற்ற ஐ.தே.க முடிவு

பொதுவான பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி, நீண்ட காலமாக கலந்துரையாடி வருகிறது.

அந்தக் கலந்துரையாடல்களின் இணக்கம் ஏற்பட்ட விடயங்களை தொடர்ந்து செயல்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளதாக அக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் வெளிப்படையாகப் பணியாற்ற முடிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 83 கடவுச்சீட்டுகளுடன் ஆண், பெண் கைது

கணேமுல்ல, ஹொரகொல்ல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (07) நடத்தப்பட்ட சோதனையைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சோதனையைத் தொடர்ந்து, வத்தளையைச் சேர்ந்த 51 வயதுடைய ஆண் மற்றும் கணேமுல்லையைச் சேர்ந்த 62 வயதுடைய பெண் ஆகிய இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கணேமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கந்தானை வீட்டில் இருந்து ஐஸ் இரசாயனம் மீட்பு

கண்டுபிடிக்கப்பட்ட தொகை இன்னும் கணக்கிடப்படவில்லை என்றும், இந்த முகவரியைக் கொண்ட வீடு மூடப்பட்டு, கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக இதுவரை எந்த சந்தேக நபரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மாடிகள் கொண்ட இந்த வீட்டை மாதந்தோறும் 150,000 ரூபாய் வாடகை அடிப்படையில் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி வழங்கியதாக வீட்டின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அந்த வீட்டின் சாவியை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நபர் செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி சாவியை மீண்டும் வழங்கியுள்ளதாக வீட்டின் உரிமையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பேலியகொடை குற்றவியல் பிரிவின் அதிகாரிகள் தற்போது சம்பவம் குறித்து ஸ்தல விசாரணையை மேற்கொண்டு வருவதுடன், களுத்துறை குற்றவியல் பிரிவால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.












**மட்டக்களப்பில் கவனயீர்ப்பு**

ஆசிரியர் நிரந்தர நியமனம் கோரி பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றி வரும் பட்டதாரிகள் மட்டக்களப்பு காந்தி பூங்காவின் முன்னால் திங்கட்கிழமை (08) அன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கனகராசா சரவணன்

# தென்னகோனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த மனு மீதான விசாரணை 2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ஐஸூடன் இருவர் கைது

வீதி தடைகளை அமைத்து மேற்கொண்ட சோதனையின் போது முச்சக்கர வண்டியில் சென்ற சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து தலா 170 மில்லி கிராம் ஐஸ் எனும் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்விருவரும் பொகவந்தலாவ சிரிபுர,செப்பல்டன் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# பிளட் மூன்...

செப்.,7 ம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9:57 மணிக்கு ஆரம்பமாகி நள்ளிரவு 1: 27 வரை நீடித்த அரிய முழு சந்திரகிரகணத்தை மக்கள் வெறும் கண்களால் பார்த்து ரசித்தனர்.


சூரியன், நிலா மற்றும் பூமி இவை மூன்றையும் ஒரே நேர்க்கோட்டில் வரும் போது நிகழ்வது தான் கிரகணங்கள். சூரியனை நிலவின் நிழல் மறைத்தால் அது சூரிய கிரகணமாகும். அதுவே, பூமியின் நிழல் சந்திரனை மறைத்தால் அதற்கு சந்திர கிரகணம் என்று பெயர். கடந்த மார்ச்சில் இந்தாண்டின் முதல் சந்திர கிரகணம் காணப்பட்டது. அதன் பின்னர், முழு சந்திர கிரகணம் செப்.7 இரவு 9.57 மணிக்கு ஆரம்பமாகி. நள்ளிரவு 1.27 மணி வரை நீடித்தது. இது மிக நீண்ட சந்திர கிரகணமாகும். சந்திரன் அடர்சிவப்பு நிறத்தில், காணப்பட்ட முழு சந்திர கிரகணம் 11.42 மணி முதல் 12.33 மணி வரை நடந்தது. இதற்கு பிளட் மூன்(blood moon) என்று பெயர். உலகின் பல நாடுகளில் தெரிந்தது.


இனி அடுத்த சந்திர கிரகணம் 2028ம் ஆண்டு டிச.31ல் தான் நிகழும் என்பது குறிப்பிடத்தக்கது.



























© Anadolu via Getty Images

மின்சார சபை தொழிற்சங்கங்கள்

# மீண்டும் எச்சரிக்கை

மறுசீரமைப்புக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்த மின்சார தொழிற்சங்கங்கள், தயாராக இருப்பதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

தங்கள் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சாதகமாக பதிலளிக்கவில்லை என்றால், இந்த போராட்டம் கூட்டு வேலைநிறுத்தமாக விரிவடையக்கூடும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

வங்கி, தொலைத்தொடர்பு மற்றும் பெட்ரோலியம் போன்ற துறைகளில் உள்ள தொழிற்சங்கங்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இது அவர்களின் போராட்டத்திற்கு பரவலான ஆதரவைப் பெறும் என்று தொழில்நுட்ப பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் நந்தன உதய குமார தெரிவித்துள்ளார்.



கடந்த வியாழக்கிழமை தொடங்கப்பட்ட "விதிமுறைக்கு ஏற்ப வேலை" தொழிற்சங்க நடவடிக்கை இம்மாதம் 15 வரை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் தங்கள் கோரிக்கைகள் முறையாக தீர்க்கப்படாவிட்டால், இம்மாதம் 16 முதல் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோம் என்றும், அதுவும் தோல்வியடைந்தால், நுகர்வோருக்கு சிரமத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டியிருக்கும் என்றும் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையால் ஏற்படும் சிரமத்திற்கு மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகமும் மின்சாரத் துறை சீர்திருத்த அலுவலகமும் பொறுப்பேற்க வேண்டும் என்று தொழிற்சங்க பிரதிநிதிகள் வலியுறுத்துகின்றனர்.

மின்சார திருத்தச் சட்டத்திற்கு முரணான முறையில் மின்சார சபையில் மறுசீரமைப்பு செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய வளங்களைப் பாதுகாப்பதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம், தொழிலாளர்களின் உரிமைகளை மீறியும், தொழிற்சங்கங்களுடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்களைப் புறக்கணித்தும் இந்த மறுசீரமைப்பை மேற்கொண்டதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மறுசீரமைப்பு செயல்முறையை முறையாக நடத்துதல் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட 24 கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளன.

# விலையை கூட்டி விற்றதால் சிக்கல்



எஸ். சதீஷ்

ஹட்டன் - பொகவந்தலாவ பிரதான வீதியின் பொகவந்தலாவ டியன்சின் பகுதியில் இயங்கி வந்த மதுபானசாலை ஒன்றுக்கு சீல் வைக்கப்பட்டதாக கொட்டகலை கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த மதுபான சாலையில் நீண்டகாலமாக மதுபான வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சனிக்கிழமை (06) அன்று கலால் திணைக்கள அதிகாரிகள் குறித்த மதுபானசாலைக்கு சென்று ஒரு மதுபான போத்தலை கொள்வனவு செய்தனர். அந்த போத்தல் அதிக விலைக்கு விற்பனை செய்தமை உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த மதுபானசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான தண்டப்பணம் செலுத்தும் வரை குறித்த மதுபானசாலையை திறக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி மற்றும் கொட்டகலை கலால் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மண்டையில் போட்டார் மாமனார்: மண்டையை போட்டார் மருமகன்

பொல்லால், மருமகனின் மண்டையில் மாமா டப்,டப் பென தாக்கியதால், சம்பவ இடத்திலேயே மருமகன் மரணமடைந்த சம்பவம், காலியில் கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தல்கஹவத்த பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரகொட பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மருமகனே மரணமடைந்துள்ளார். தான் தாக்கிய பொல்லால், மாமனார் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

மருமகன் தனது வீட்டில் நண்பர்களுடன் இணைந்து மதுபானம் அருந்தியுள்ளார். மது விருந்துபசாரம் நிறைவடைந்த நிலையில், மதுபோதையில் தள்ளாடிய நண்பர்களை அவர்களது வீடுகளுக்கு கொண்டுசென்று விடுவதற்காக மாமனாரிடம் முச்சக்கரவண்டியை மருமகன் கேட்டுள்ளார்.

எனினும் தனது முச்சக்கரவண்டியை கொடுக்க மாமனார் மறுத்துவிட்டார். இதனால், ஆத்திரமடைந்த மருமகன், வீட்டின் கதவை பொல்லால் அடித்து உடைத்து தனது மனைவியையும் தாக்க முயன்றுள்ளார்.

மதுபோதையில் உள்ள மருமகனை தடுப்பதற்காக மாமனார் பொல்லால் மருமகனை தாக்கியுள்ளார். காயமடைந்த மருமகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபரான 58 வயதுடைய மாமனார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் எனத் தெரிவித்த கரந்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்புடன் இருவர் கைது

பாறுக் ஷிஹான்

வயல்வெளியில் மறைத்து வைக்கப்பட்ட கசிப்பு போத்தலுடன் இரண்டு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிப்பள்ளி பாலத்திற்கு அருகில் உள்ள ஆற்றோர வயல்வெளியில் ஞாயிற்றுக்கிழமை(7) முற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்முனை விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது சுமார் 23 மற்றும் 26 வயதுடைய வீரமுனை பகுதியை சேர்ந்த சந்தேக நபர்களை 40 000



மில்லி லிட்டர் கசிப்புடன் கைது செய்துள்ளனர்.

கைதான இச் சந்தேக நபர்கள் உட்பட சான்றுப் பொருட்கள் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எல்ல விபத்தில் சிக்கியவர்களுக்காக விசேட பிரார்த்தனை

எஸ். சதீஷ்

நாட்டை உலுக்கிய எல்ல , வெல்லவாய பேருந்து விபத்தில் உயிரிழந்த எமது உறவுகளின் ஆத்மா சாந்திக்காகவும் விபத்தில் காயமடைந்து உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் உறவுகள் சீக்கிரம் குணமடைய வேண்டியும் விசேட கூட்டுப் பிரார்த்தனை ஒன்று லிந்துலை, சென்றகிலாஸ்தோட்டத்தில் திங்கட்கிழமை (07) முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தோட்ட பொதுமக்கள் இளைஞர்கள் அறநெறி பாடசாலை மாணவர்கள் உட்பட பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டிருந்ததுடன்

இதன்போது உயிரிழந்த உறவுகளுக்கு விளக்கேற்றி மெழுகுவர்த்தி கொளுத்தி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இங்கு இடம்பெற்ற அஞ்சலி கூட்டத்தில் வீதி விபத்துக்களை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும்.

வாகன சாரதிகள் போக்குவரத்து சட்டங்களை மதித்து பொறுப்புடன் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் ஐஸ் வாடி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் நடமாடிய இளைஞனை ஞாயிற்றுக்கிழமை(7) இரவு கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.கல்முனை விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கல்முனை பகுதியைச் சேர்ந்த, 1 பிள்ளைகளின் தந்தையான 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 740 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் உட்பட சான்றுப்பொருட்கள்யாவும் சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# உரம் இடுவதற்கு சென்ற விவசாயி திடீர் மரணம்



பாறுக் ஷிஹான்

இயற்கை உரம் (கோழி எரு) இடுவதற்கு வயலுக்கு சென்ற நிலையில் நெஞ்சு வலி ஏற்பட்டு உயிரிழந்தவரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஞாயிற்றுக்கிழமை (7) மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த சம்மாந்துறை மல் ஆறாம் வீதியைச் சேர்ந்த 60 வயது மதிக்கத்தக்க அப்துல் மஜீத் என்பவரே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

மல்வத்தை புதுக்காடு பகுதியில் உள்ள காணியில் விவசாயம் செய்து வந்த நிலையில் இயற்கை உரம்(கோழி எரு) இடுவதற்கு அங்கு சென்ற போது குறித்த நபருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்ற நிலையில் இடைநடுவில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மரணமடைந்தவர் இருதய நோய்க்கு உள்ளான நிலையில் கடந்த காலங்களில் சிகிச்சை பெற்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# காயங்கேணியில் விபத்து ; ஒருவர் காயம்




எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயங்கேணி பிரதான வீதியில் லொறியொன்றும் முச்சக்கரவண்டியும் திங்கட்கிழமை (8) அன்று விபத்துக்குள்ளாகின.

திருகோணமலையில் இருந்து ஏறாவூர் நோக்கி பயணித்த லொறி முன்னால் பயணித்த முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. லொறியில் பயணித்தவர் விபத்தின் போது காயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகள்

இலங்கையின்சட்ட வரலாற்றில் ஒரு மைல்கல்லாக குடும்பவன்முறை தடுப்புச் சட்டத்தை கருதலாம். பெண்கள் இயக்கங்கள் மற்றும்மனித உரிமை ஆர்வலர்களின் நீண்டகாலகோரிக்கைகள் மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின்விளைவாக, குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் 2005-08-09 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

எனினும் குடும்ப வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. கணவனை கோடரியால்கொத்திய மனைவி, தனது பிள்ளையுடன் பொலிஸில் சரணடைந்துள்ள சம்பவம், கெப்பத்திகொல்லாவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, தன்னுடைய குழந்தையுடன் கொள்ளுப்பிட்டி கடலில் தாயொருவர் குதித்துள்ளார். அவர்காப்பாற்றப்பட்ட போதிலும், குழந்தை கடலில் மாயமாகியுள்ளது. இதுவும் குடும்ப வன்முறைகாரணமாக இடம் பெற்றுள்ளது என்பது விசாரணைகள் ஊடாக தெரியவந்துள்ளது.

குடும்பவன்முறை என்பது பாதிக்கப்பட்டவருக்கும் குற்றவாளிக்கும் இடையிலானதனிப்பட்ட உறவின் விளைவாக ஒருநபரை உடல் ரீதியாகவோ அல்லதுஉளவியல் ரீதியாகவோ துஷ்பிரயோகம் செய்வதாகும்.

துஷ்பிரயோகம் வீட்டுச் சூழலுக்குள் நடக்க வேண்டிய அவசியமில்லை,வீட்டிற்கு வெளியேயும் நிகழலாம். உடல் ரீதியான துஷ்பிரயோகம் என்பதுதன்னிச்சையான கருக்கலைப்பு, கொலை முயற்சி, குழந்தைதுஷ்பிரயோகம், காயப்படுத்துதல், கடுமையான காயம், அடைத்துவைத்தல், வற்புறுத்தல், குற்றவியல் வற்புறுத்தல், தாக்குதல், பாலியல் வன்கொடுமை, குழந்தைகளைபாலியல் ரீதியாக சுரண்டுதல், இயற்கைக்குமாறான குற்றங்கள், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம், குற்றவியல்மிரட்டல் போன்ற செயல்களை உள்ளடக்கியது,இவை பாதிக்கப்பட்டவரின் உடலை நோக்கி இயக்கப்படுகின்றன.

குடும்பவன்முறையில் உடல் ரீதியான துஷ்பிரயோகம்மட்டுமல்ல, மன ரீதியான துஷ்பிரயோகமும்அடங்கும். சட்டத்தில் கூறப்பட்டுள்ள படி, எந்த ஒரு உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகமும் இந்தமன ரீதியான துஷ்பிரயோகத்துடன் தொடர்புடையது.ஒருவர் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய பல வழிகள் உள்ளன. கடுமையான அவமதிப்புகள், வாய்மொழி துஷ்பிரயோகம் மற்றும் கடுமையான உடனடிமன உளைச்சலை ஏற்படுத்தும் எந்த ஒரு செயலும் மன ரீதியானதுஷ்பிரயோகம் ஆகக் கருதப்படலாம்.

வீட்டுவன்முறையால் பாதிக்கப்பட்டவர் குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டத்தின் கீழ் பாலின பாகுபாடுஇல்லாமல் நிவாரணம் பெறலாம். இந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள படிஉறவில் இருக்கும் நபர்கள், ஒரு தரப்பினர் அந்தஉறவைப் பயன்படுத்தி மற்ற தரப்பினருக்கு எதிராககுடும்ப வன்முறையில் ஈடுபட்டால் அவர்கள் மீது வழக்குத்தொடரலாம்.

குடும்பவன்முறை காரணமாக, கணவன் அல்லது மனைவியால் எடுக்கப்படும் மிக மோசமான தீர்மானங்களால்அவர்களுடைய பிள்ளைகள் அநாதையாக்கப்படுகின்றனர்

முன்னர், கணவன் மீது மனைவிக்கும், மனைவி மீது கணவனுக்கும் ஏற்பட்ட சந்தேகமே குடும்ப வன்முறைக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. எனினும், தற்போது அலைபேசியில் ஓர் அழைப்பு வந்துவிட்டால், அதற்கும், ஏன், சமூக வலைத்தளங்களில் ஒரு விருப்பத்தை தெரிவித்து லைக் செய்தாலேயே சந்தேகம் தலைவிரித்தாடுகிறது. இதற்கும் இரு தரப்பினரையும் தெளிவுப்படுத்துவது அவசியமாகும். இல்லையேல் குடும்ப வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பது சிரமமாகும்.


தமிழ்Mirror க்கு
www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# அஷ்ரபின் மரணம் தூசு தட்டப்படுமா?

**மொஹமட் பாதுஷா**

‘அஷ்ரபின் படுகொலை மரணம், 43 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க சி.ஐ.ஏயினால் கொலை செய்யப்பட்ட சிலியின் மக்கள் தலைவன் சில்வர்டோர் அலேண்டேயின் அரசியல் படுகொலையுடன் ஒப்பிடக் கூடியது. அஷ்ரபின் மரணம் வெறுமனே ஒரு உள்ளூர் திட்டமிடல் அல்ல. இதன் பின்னால் சர்வதேச அரசியலின் ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்திருக்கின்றது என நான் உறுதியாக நம்புகின்றேன். அதற்கு ஏவப்பட்ட ஒரு கருவியே விடுதலைப் புலிகள். இதன் பின்னால் நோர்வே மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் இருந்துள்ளனர்

சர்ஜூன் ஜமால்தீன் எழுதிய ‘எம்.எச்.எம். அஷ்ரபின் மரணம்’ நூலுக்கு அஷ்ரபோடு நீண்டகாலம் மிக நெருக்கமாக இருந்தவரும் அரசியல், சமூக ஆய்வாளருமான எம். பௌஸர் எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிட்டுள்ள வரிகளே இவையாகும். இந்த மரணத்தின் பின்னால் இருந்த பாரதூரத்தைச் சொல்வதற்கு இவை மட்டுமே போதுமானவையாகும்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவரான எம்;.எச்.எம். மரணித்து எதிர்வரும் 16ஆம் திகதியுடன் 25 வருடங்கள் நிறைவடைகின்றன. இன்று எத்தனையோ பழைய கோப்புக்கள் தூசுதட்டப்பட்டு விசாரணைகள் எடுக்கப்படுகின்ற போதிலும், அவரது மர்ம மரணம் பற்றிய கோப்பு மட்டும் தூசுதட்டப்பட்ட, உண்மை இன்னும் வெளிக் கொணரப்படவில்லை.

ஒரு பெரும் முஸ்லிம் தலைவரின் இந்த மரணம் படுகொலையாக இருக்கலாம் என்ற பலமான சந்தேகங்கள் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் இருக்கின்ற போதிலும், முஸ்லிம்கள் ஒரு சமூகமாக தமது மறைந்த தலைவரின் மரணத்திற்காக நீதி வேண்டிப் போராடவில்லை.

அஷ்ரபை வைத்து இன்று வரை பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கின்ற றவூப் ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் தலைவர்களும் அரசியல்வாதிகளும் கூட இந்த விசாரணைகளுக்காகத் தாம் அதிகாரத்தில் இருந்த போது, முன்னிற்கவும் இல்லை. அதிகாரமில்லாத காலத்தில் அழுத்தம் கொடுக்கவும் இல்லை.

அஷ்ரபிடமிருந்து இமாலய அனுகூலங்களைப் பெற்றுக் கொண்ட சந்திரிகா குமாரதுங்க ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். அது தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. ஆனால், உண்மையை அவர் வெளியில் கொண்டு வரத் தவறிவிட்டார். குறைந்தபட்சம் இந்த விசாரணை அறிக்கையின் முழுமையான பிரதிகூட சுவடிகள் திணைக்களத்திற்கு இன்னும் வழங்கப்படவில்லை எனச் சொல்லப்படுகின்றது.

முஸ்லிம்களுக்காகத் தனித்துவ அடையாள அரசியலை வடிவமைத்து, மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே ஒரு தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸையும் தன்னையும் உருவாக்கியிருந்த ஒரு மிகப் பெரும் தலைவர்தான் அஷ்ரப்.

அவரது மரணத்தின் பின்னால் உள்ள உண்மைகள் இவ்வாறு மறைக்கப்படுகின்றது என்றால், விசாரணை அறிக்கைகளின் பக்கங்கள் காணாமல் போகின்றன என்றால், அரசியல் தரப்பினர் மௌனம் காக்கின்றனர் என்றால் இதற்குப் பின்னால் ‘ஏதோ ஒரு சதித்திட்டம்’ இருக்கின்றது என்ற சந்தேகம் முஸ்லிம்களுக்கு எழத்தானே செய்யும்?

குறிப்பாக, முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்திற்கு முன்னரான முஸ்லிம் அரசியல் என்பது வேறு விதமாக அமைந்திருந்தது. அஷ்ரப் காலத்து அரசியல் முற்று முழுதாக வேறுபட்டிருந்தது. அரசாங்கத்தோடும் தமிழ் அரசியல்வாதிகளோடும் உறவுகளைப் பேணி வந்தார் அவர்.

ஆனால், சமகாலத்தில், சிங்கள இனவாத அரசியல்வாதிகளும் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான அடக்குமுறையைப் பிரயோகித்த போது, அவற்றைப் பகிரங்கமாகவே நெஞ்சை நிமிர்த்திப் பேசக் கூடிய தைரியம் அவருக்கு மட்டுமே இருந்தது.

அவர் மீதும் ஒருசில விமர்சனங்களை முன்வைப்போர் உள்ளனர்.

ஆயினும், முஸ்லிம்களின் அபிலாஷை, காணிப் பிரச்சினைகள், முஸ்லிம் தனியலகு, கரையோர மாவட்டம், இனப் பிரச்சினை தீர்வில் உரிய பங்கு என தனது சமூகத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களிலும் தெளிவான நிலைப்பாட்டை வலியுறுத்தி வந்த தலைவர் அஷ்ரப் மட்டும்தான்.

எனவே, அஷ்ரப் பலருக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார். இன்னும் பலருக்கு ஒருவித தலையிடியாக இருந்தார் என்பதை அன்றைய அரசியல் உள்ளரங்கம் தெரிந்தோர் அறிவார்கள்.

பெரும்பான்மைக் கட்சிகளின் ஆட்சியைத் தீர்மானிக்கக் கூடிய வல்லமையை மு.கா. பெற்றிருந்தது இது அக்காலத்தில் தேசிய அரசியலில் இரண்டாம், மூன்றாம் நிலைகளில் இருந்த சிங்களக் கட்சிகளுக்கு நல்லதாகப் படவில்லை.

கொழும்பை மையமாகக் கொண்டு முஸ்லிம்களுக்கான அரசியலை காலகாலமாகச் செய்து வந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகள் கூட, முஸ்லிம் அரசியல் கிழக்கை நோக்கி நகர்வதை அறவே விரும்பவில்லை என்றும், எப்போதும் அஷ்ரபை பற்றி நெஞ்சுக்குள் குமுறிக் கொண்டே இருந்தார்கள் என்றும் சொல்வார்கள்.

முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் ஆயுதக் குழுக்களையும் நோக்கிப் போகாமல் விடுவதற்கு மு.கா.லின் அரசியல்மயமாக்கமும் ஒரு காரணமாக அமைந்தது எனலாம். இந்தப் பின்னணியில், விடுதலைப் புலிகளும் அவர்களுக்கு ஒத்து ஊதிய தமிழ் அரசியல்வாதிகளும் அஷ்ரபின் பலத்தையும் நெஞ்சுரத்தையும் தமக்கு சாதகமானதாகப் பார்க்கவில்லை.

மிக முக்கியமாக, முஸ்லிம்களுக்கு எதிரான மறைமுக நிகழ்ச்சித் திட்டங்களுடன் இலங்கைக்குள் நுழையும் வெளிநாடுகள், வெளிநாட்டுச் சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது என்பதில் அஷ்ரப்பும் அவரது அக்காலத்து அரசியல் தோழர்களும் உறுதியாக இருந்தனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை சேகு இஸ்ஸதீன், அஷ்ரப் உள்ளிட்டோர் எதிர்த்தது ஒருபுறமிருக்க, பிற்காலத்தில் நோர்வே போன்ற வெளிநாட்டுச் சக்திகளின் உள் வருகையை அஷ்ரப், ஜனாதிபதி சந்திரிகா ஊடாக தடுத்தார் என்று நம்பகரமாகச் சொல்லப்படுகின்றது.

இலங்கையில் சமாதான பேச்சுவார்த்தை என்ற ஒரு விடயம் வந்தபோது, அது குறித்து அஷ்ரபிடம் ஆலோசனை கேட்டார் சந்திரிகா அம்மையார்,

‘இந்த திட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்கிற்கோ எனது சமூகத்திற்கோ எந்த நன்மையும் இல்லை. எனவே, இதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சந்திரிகாவிடம் அஷ்ரப் சொன்னதாக அஷ்ரபை அதற்கு முதல் நாள் இரவும் கூட, சந்தித்திருந்த முன்னாள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லா கூறுகின்றார்.

ஆகவே, தலைவர் அஷ்ரப் உண்மையிலேயே திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்றால், சம்பந்தப்பட்டோர் எதிர்பார்த்த மாறுதல்கள், பலன்கள் அவர்களுக்குக் கிடைத்ததாகவே சொல்ல முடியும். இந்தப் பின்னணியில் அஷ்ரப் மரணம் என்ற விடயமும் மூடிமறைக்கப்பட்டது எனலாம்.

இதனை பௌஸர், மேற்படி நூலில் இவ்வாறு கூறுகின்றார்.

“2002இல் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த அரசியல் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் ஒரு முக்கிய காய்நகர்த்தலே அஷ்ரப் மீது நடத்தப்பட்ட படுகொலைத் தாக்குதலாகும்.

ஒரு நாட்டில் ஒரு விடயத்தைச் செய்வதற்கு முன் தமது நிகழ்ச்சி நிரலை தங்குதடையின்றி நிகழ்த்த வாய்ப்பான சூழலை சர்வதேச ஆதிக்க அரசுகள் எப்படித் திட்டமிடும், அதற்கு என்ன என்ன செய்யும் என்பதை சமகால சர்வதேச அரசியல் தொடர்பில் அறிவுள்ளவர்கள் ஓரளவேனும் புரிந்து கொள்ளலாம்’ என்கின்றார்.

விபத்துக்குள்ளான ஹெலியில் தலைவர் அஷ்ரபுடன் கதிர்காமத்தம்பி என்ற ஒருவரும் சென்றிருந்தார். அவருக்கு விடுதலைப் புலிகள் பின்னர் மாவீரர் பட்டம் வழங்கியதாகவும் அவர் கொண்டு சென்ற பையிலேயே குண்டு இருந்திருக்கலாம் என்றும் அக்காலத்தில் பேசப்பட்டது. ஆனால், அன்றைய தினம் அஷ்ரபுடன் பெரியதம்பி என்று ஒருவரும் பயணித்துள்ளார் என்ற புதிய தகவலும் ஆச்சரியமளிக்கின்றது.

ஆகவே, நன்றாகக் கவனியுங்கள்,.... அஷ்ரபின் மரணத்திற்கு முன்னரான நிலை.... அதன் பிறகு தற்போது வரையான முஸ்லிம் அரசியலின் போக்கு எல்லாவற்றையும் பார்த்தால் வலுவான ஆனால் நியாயமான சந்தேகம் ஒன்று உருவாகின்றது.

அஷ்ரப் எல்லாவற்றையும் இழுத்துப் பிடிக்கின்றார். பிறகு அவாது மரணம் நிகழ்கின்றது...... பேரியலும் ஹக்கீமும் இணைத் தலைவர்களாகின்றனர். பிறகு ஹக்கீம் தனித் தலைவராகின்றார்.


அதன் பிறகு எந்த தங்கு தடையுமின்றி, அஷ்ரப் தடுத்த நோர்வே உள்ளே வருகின்றது, எல்லாம் ‘அவர்கள்’ திட்டமிட்டபடி நடக்கின்றது. ஹக்கீம் எதிர்க்கலில்லை. முஸ்லிம்களுக்கு உரிய இடம் இல்லை என்பதை அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

அதன்பிறகு, இன்று வரையான காலத்தில் முஸ்லிம் அரசியல் கெட்டுக் குட்டிச் சுவராகி இருக்கின்றது. கிட்டத்தட்ட முஸ்லிம் கட்சிகளும் சரி முஸ்லிம் மக்களும் சரி 1970களில் இருந்த நிலைமைக்கு, மீண்டும் பெருந்தேசியக் கட்சிகளை நோக்கி ஈர்க்கப்பட்டுள்ளனர்.

சமூகத்திற்கான அரசியல் உண்மையில் தெருவில் நிற்கின்றது.

ஆகவே, வெளிநாட்டுச் சக்தி, உள்நாட்டில் ஒரு தரப்பினர், புலிகள் எனப் பல தரப்பினர் ஒரு கூட்டுச் சதித்திட்டத்தைத் தீட்டி, தமது இலக்குகளுக்குத் தடையாக இருந்த அஷ்ரப் என்ற பெருவிருட்சம் வேரறுத்துள்ளதுடன்h? அதன்மூலம் நீண்டகால அடிப்படையில் முஸ்லிம்களின் அரசியல் அடையாளத்தின் அசல் தன்மையைச் சீரழித்துள்ளனரா? என்பதுதான் கவலையும் ஆபத்தும் உறைந்த கேள்வியாகும்;.

இந்தக் கேள்விக்கு விடை காணப்படாவிட்டால், இதே உத்தியை இனியும் ‘அவர்கள்’ பிரயோகிக்க மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கையுடன் நாமே தேடும் ஆதாயங்கள் உண்மை வழியில், நேர்மையாக இருக்க வேண்டும். ஒரு வர்த்தகர் நம்பிக்கையுடன் ஒரு தொழிலைத் தொடங்கினால் அது நிலையாக இருக்க நேர்மை, நாணயம் மிக அவசியம்.

எந்த தொழிலிலும் எல்லோரும் உயர் நிலைக்கு வரமுடியும். ஆனால், மக்கள் நலன் பற்றியும் கவனமெடுக்க வேண்டும்.

நீங்கள் சரியாக நடந்தால் உங்களை நோக்கி ஒரு பெருங்கூட்டமே இணைந்து வரும். லாபம் என்பது வெறும் பணம் அல்ல. மக்களை நேசிப்பதால் வரும். அன்பினால் கிடைத்த வரவுகளாகும்.

இணைந்த மக்கள் பலமே, வையகத்தின் செழிப்புமாகும். பிறரைத் தூக்கிவிடாதவனும், தன்னை மட்டும் கவனிப்பவனும், எவரது வளர்ச்சியைத் தடுப்பவனும் உலகத்தால் வீசியெறியப்படுகின்றான்.

உலகம் ஒரு பெரிய வீடு ஒவ்வொரு நாடுகளும் அதன் அறைகள் என்பதைச் சகல அரசுகளும் உணரவேண்டும். எமக்கே எல்லாம் என எந்த வல்லரசும் பேராசை கொண்டால். என்ன நடக்கும். என்பதைக் கற்பனை செய்யமுடியாது. ஒவ்வொரு மனிதனும் இந்த உலகை இயக்குகின்றான். எனவே, எமக்கானதே இந்த புவனம் உணர்க.

- பருத்தியூர் பால.வைரவநாதன்

## கடிதங்கள்

### கழிவுநீரால் துர்நாற்றம்: பொதுமக்கள் கடும் விசனம்

மட்டக்களப்பு நகரில் உள்ள முதலியார் சின்னலெப்பை வீதியில் உள்ள வடிகானில் கழிவு நீர் வழிந்தோட முடியாது வீதியில் தேங்கி நிற்பதுடன், கடுமையான துர்நாற்றம் வீசி வருவதால் அந்த வீதி ஊடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பயணிக்க முடியாமல் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வடிகானில் கழிவுப் பொருட்கள் நிறைந்து காணப்படுவதுடன் அதனூடாக வழிந்து ஓடும் கழிவு நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதுடன் கழிவு நீர் வடிகானை விட்டு வெளியேறி வீதியில் தேங்கி நிற்கிறது.

அதே நேரத்தில் குறித்த வடிகான்களில் பிளாஸ்டிக் பொருட்கள் குவிந்து காணப்படுவதுடன் மரங்கள் வளர்ந்து வருகிறதுடன் தேங்கி நிற்கும் கழிவுநீரால் துர்நாற்றம் வீசி வருவதால் அந்த வீதியில் உள்ள குடியிருப்பவர்கள், பொது மக்கள் மற்றும் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

“இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்த போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? துர்நாற்றம் இல்லாமல் செய்வார்களா? வடிகான்களை துப்புரவு செய்வார்களா? ” என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அத்துடன் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

- கனகராசா சரவணன்

### எதிர்கால இளைஞர்களின் கையிலே

# SDGYNSL முன்னெடுப்புகள்



S.பாத்திமா ஷர்பின்,
SUNFO GLOBAL FEDERATION
COLOMBO DISRICT
CORDINATOR.

நிலைத்த அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals-SDGs) என்பது உலகத்தையே மாற்றும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபை 2015ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய ஒரு முக்கிய முயற்சி ஆகும். 2030ஆம் ஆண்டுக்குள் உலகம் அனைவருக்கும் சமநிலை, நியாயம் மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்யும் வகையில் 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள் இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ளன. வறுமை, உணவுத் தட்டுப்பாடு, கல்வியின்மை, பாலின சமத்துவம், நீர்வள பிரச்சினைகள் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற சவால்களை சமாளிப்பதில் SDGs ஒரு முக்கிய வழிகாட்டியாக செயல்படுகிறது. இலங்கையில், இளைஞர்களை உலகளாவிய SDGs முயற்சிகளுடன் இணைக்கும் இலங்கை நிலையான அபிவிருத்தி இலக்கு இளைஞர் வலயச் சங்கம் (Sustainable Development Goals Youth Network of Sri Lanka-SDGYNSL) அமைந்துள்ளது.

இந்த இலக்குகள் உலகம் முழுவதும் மக்கள், சுற்றுப்புறம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை இணைக்கும் ஒரு முழுமையான நோக்கத்தை வழங்குகின்றன. உலக நலனுக்காக மட்டுமல்லாமல், ஒவ்வொரு சமூகத்துக்கும் இதன் தாக்கம் பெரிதும் உள்ளது. இன்றைய இளைஞர்கள் இந்த மாற்றத்தின் முக்கிய சக்தியாக இருக்கின்றனர். அவர்களின் ஆர்வம், சிந்தனைத் திறன் மற்றும் புதிய முயற்சிகள் SDGs நோக்குகளை விரைவாக முன்னெடுக்க உதவுகின்றன.

இந்த சூழலில், இலங்கையிலும் இளைஞர்களை உலகளாவிய SDG முயற்சிகளுடன் இணைக்கும் SUNFO (Sri Lanka United Nation Friendship Organization)என்ற தளம் அமைந்துள்ளது. இளைஞர்கள் சமூக சேவை, சுற்றுப்புற பாதுகாப்பு, கல்வி மற்றும் சமூக முன்னேற்றம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று, உலகளாவிய வளர்ச்சி இலக்குகளை அடைவதில் நம்பகமான பங்களிப்பாளர்களாக மாற SUNFO வழிகாட்டுகிறது. இதன் மூலம் இளைஞர்கள் தங்கள் திறன், ஆர்வம் மற்றும் சமூகப் பொறுப்பைப் பயன்படுத்தி, உலகைச் சிறந்த இடமாக மாற்ற வழிவகுக்கின்றனர்.

## ஐந்து முக்கியக் கொள்கைகள்–5 P'S

நிலைத்த வளர்ச்சி என்பது வெறும் பொருளாதார முன்னேற்றம் அல்ல, அது சமூக நலன், சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் நீண்டகால அமைதியையும் இணைக்கும் ஒரு முழுமையான கண்ணோட்டமாகும். இதன் அடிப்படையில் ஐந்து முக்கியக் கொள்கைகள் - 5 P's - People (மக்கள்), Plant (பூமி), Prosperity (செழிப்பு), Peace (அமைதி), Partnership (கூட்டு முயற்சி) உள்ளன. மக்கள் நலன் முன்னேற வேண்டும், சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க வேண்டும், பொருளாதாரம் வளமானதாக இருக்க வேண்டும், சமூக அமைதி நிலைத்திருக்க வேண்டும், மேலும் சர்வதேச மற்றும் உள்ளூர் கூட்டாண்மைகள் வலுவாக இருக்க வேண்டும் என்பதே இந்த கொள்கைகளின் நோக்கம். இவற்றின் ஒத்திசைவு இல்லாமல், உலகளாவிய வளர்ச்சி நீடித்ததாக அமைய முடியாது.

இன்றைய உலகில் இளைஞர்கள் முக்கிய சக்தியாக இருக்கிறார்கள். அவர்கள் புத்திசாலித்தனம், ஆர்வம், புதிய எண்ணங்கள் மற்றும் சமூக சேவையில் ஈடுபடுவதன் மூலம் SDGs இலக்குகளை அடைவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இளைஞர்கள் இச்செயலில் ஈடுபட்டால், உலகளாவிய சமூக மாற்றம் விரைவாகவும் நிலைக்கவும் செய்யும்.

இந்தச் சூழலில், இலங்கையிலும் இளைஞர்களை உலகளாவிய SDG முயற்சிகளுடன் இணைக்க SUNFO மிக முக்கியமான தளமாக விளங்குகிறது. இளைஞர்களுக்கான கலந்துரையாடல், சமூக மற்றும் சுற்றுப்புற நிகழ்ச்சிகள், கல்வி செயல்பாடுகள் போன்ற வாய்ப்புகளை SUNFO வழங்குகிறது. இதன் மூலம் இளைஞர்கள் உலகளாவிய வளர்ச்சியில் நேரடி பங்களிப்பாளர்களாக மாறி, தங்கள் திறன் மற்றும் ஆர்வத்தைப் பயன்படுத்தி நிலைத்த வளமான எதிர்காலத்தை உருவாக்கக் கற்றுக்கொள்கின்றனர்.

## நிலைத்த வளர்ச்சி இலக்குகள் (17 17 SDGs Goals)

பல நாடுகள் தங்கள் முன்னேற்றக் குறிக்கோள்களில் மிக முக்கியத்துவம் கொடுத்து, நிலைத்த வளர்ச்சி இலக்குகள் (SDGs) அடிப்படையிலான கொள்கைகளை முன்னெடுக்கின்றன. இதன் நோக்கம் அடுத்த 15 ஆண்டுகளில் மனிதர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், பூமியை பாதுகாக்கவும் ஆகும். உள்ளூர் அரசுகள் மற்றும் சமூகத்துடன் இணைந்து செயல்பட்டால், மக்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தியும், உலக சுற்றுப்புறத்தை பாதுகாப்பதிலும் பங்களிக்க முடியும்.

நிலைத்த வளர்ச்சி இலக்குகள் (SDGs) - 17 உலகளாவிய இலக்குகள்

*1. வறுமையை முழுமையாக அகற்றுதல்:*
உலகெங்கிலும் உள்ள வறுமை மற்றும் தட்டுப்பாடுகளை நிறுத்துவோம்.

*2. பசிக்குப் போதுமான உணவு மற்றும் நிலைத்த விவசாயம்:*
அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் நிலைத்தச் செயற்கை விவசாயத்தை ஊக்குவிப்போம்.

*3. ஆரோக்கியமான வாழ்க்கை:*
எல்லா வயதினருக்கும் ஆரோக்கியம், நலம் மற்றும் வாழ்க்கைத் தரம் உறுதி செய்யப்படும்.

*4. உலகெங்கும் தரமான கல்வி:*
அனைவருக்கும் சமமான, தரமான கல்வி மற்றும் ஆயுள் வாழ்வுக் கல்வி வாய்ப்புகள் வழங்கப்படும்.

*5. பாலின சமத்துவம்:*
பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் சக்தியூட்டப்பட்டு சமத்துவ வாழ்வை அனுபவிப்பார்கள்.

*6. நீர் மற்றும் கழிவுநீர் வசதி:*
அனைத்து மக்களுக்கும் நீர், கழிவுநீர் வசதி மற்றும் நிலைத்த நிர்வாகம் உறுதி செய்யப்படும்.

*7. நிலைதிட்ட சக்தி அணுகல்:*
மலிவான, நம்பகமான, நிலைத்த மற்றும் நவீன சக்தி (Energy) அனைவருக்கும் கிடைக்கும்.

*8. நிலைத்த பொருளாதார வளர்ச்சி:*
உள்ளடக்கமான, சுய வளர்ச்சி வாய்ந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் சிறந்த வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

*9. வலுவான அடித்தளம் மற்றும் தொழிற்துறை வளர்ச்சி:*
நிலைத்த தொழிற்துறை வளர்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் ஊக்குவிக்கப்படும்.

*10. சமத்துவம் அதிகரித்தல்:* நாட்டுக்குள்ளும், நாடுகளுக்கிடையுமுள்ள சமத்துவத்தை மேம்படுத்தல்

*11. நகரங்கள் மற்றும் வசிப்பிடங்கள்:*
உள்ளடக்கமான, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலைத்த நகரங்கள் உருவாக்கப்படும்.

*12. நிலைத்த உற்பத்தி மற்றும் நுகர்வு:*
சுற்றுப்புறத்தை பாதிக்காத முறையில் உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறைகள் ஊக்குவிக்கப்படும்.

*13. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்:*
உடனடி நடவடிக்கைகள் எடுத்து காலநிலை மாற்றத்தை சமாளிப்போம்.

*14. கடல் வளங்கள் பாதுகாப்பு:*
கடல் மற்றும் கடல்புற வளங்களை நிலைத்த முறையில் பாதுகாக்கவும் பயன்படுத்தவும்.

*15. நிலப்பரப்பு மற்றும் உயிரினங்கள் பாதுகாப்பு:*
நிலப்பரப்பு, காடுகள், வறண்ட மண் பிரச்சினைகள் நிர்வகிக்கப்பட்டு உயிரினப் பல்வேறு பாதுகாக்கப்படும்.

*16. அமைதி மற்றும் நம்பகமான சமூகங்கள்:*
அனைவருக்கும் நீதிமுறை அணுகல் வழங்கப்பட்டு, நம்பகமான மற்றும் பொறுப்பான நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

*17. உலகளாவிய கூட்டிணைவு:*
SDGs செயல்பாடுகளை வலுப்படுத்தி, உலகளாவிய கூட்டிணைவை உயிர்ப்பிக்கவும்.

## நிலைத்த வளர்ச்சிக்கு எதிரான சவால்கள்

நிலைத்த வளர்ச்சியை அடைய உலகம் பல சவால்களை எதிர்கொள்கிறது. முதன்மையாக, வறுமை, வேலைவாய்ப்பு பற்றாக்குறை மற்றும் சமூக அசமநிலை உலகின் பல பகுதிகளில் பெரும் பிரச்சினையாக உள்ளது. கல்வி, ஆரோக்கியம் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளில் சமநிலை இல்லாததால் சமூக ஒற்றுமை பாதிக்கப்படுகிறது.

இதே நேரத்தில், காலநிலை மாற்றம், காட்டுப் பரப்புகள் அழிவு, நீர்நிலை குறைவு மற்றும் மாசு போன்ற சுற்றுப்புற பிரச்சினைகள் உலகளாவிய சூழலை ஆபத்தானதாக மாற்றுகின்றன. இயற்கை வளங்கள் குறைந்து, மனிதர்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகிறது.

சமூக அநீதியும் உலகின் பல பகுதிகளில் பரவலாக உள்ளது. பாலின, சாதி, வருமானம் மற்றும் கல்வி வாய்ப்புகளில் பாகுபாடு சமூக அமைதியையும், வளர்ச்சியையும் தடுக்கும்.

இந்த சவால்களை எதிர்கொள்வதில், SUNFO போன்ற உலகளாவிய இளைஞர் கூட்டமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை இளைஞர்களுக்கு சமூக நீதியை, சுற்றுப்புற பாதுகாப்பை முன்னெடுக்கவும், பண்பாட்டு மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தவும் வழிகாட்டுகின்றன. SUNFO கலந்துரையாடல்கள், ஒத்துழைப்பு முயற்சிகள் மற்றும் சமூக சேவை நிகழ்ச்சிகள் மூலம் இளைஞர்கள் உலகளாவிய சவால்களுக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் நேரடியாகப் பங்கேற்க உதவுகிறது. இவ்வாறு, இளைஞர்கள் சமூக மாற்றத்தின் முன்னணி வீரர்களாக மாறி, உலகத்தைச் சமநிலை மற்றும் நீடித்த வளர்ச்சிக்குக் கொண்டு செல்லும் பணியில் பங்கு வகிக்கின்றனர்.

## இளைஞர்கள்: வளர்ச்சியின் முன்னணி சக்தி

இளைஞர்கள் இன்று உலகளாவிய மாற்றத்தின் முன்னணி இயக்கிகள் ஆக இருக்கின்றனர். உலக மக்கள் தொகையில் இளைஞர்கள் ஒரு பெரும் பகுதியைக் கொண்டுள்ளதால், அவர்கள் சக்தி, சிந்தனைத் திறன், புத்திசாலித்தனம் மற்றும் புதிய எண்ணங்களைக் கொண்டு சமூக மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். உலகம் எதிர்கொள்ளும் பல சவால்களைச் சமாளிப்பதில் இளைஞர்களின் ஆர்வமும், சிருஷ்டித் திறனும் மற்றும் ஊக்கமும் தீர்மானிக்கின்றன.

இளைஞர்கள் சமூக சேவை, சுற்றுப்புற பாதுகாப்பு, தொழில்நுட்ப புதுமை, சமூக நலனுக்கான ஆர்வப் பணிகள் போன்றவற்றில் ஈடுபடும் போது, உலகளாவிய வளர்ச்சிக்கு புதிய நெறிமுறைகளை உருவாக்குகிறார்கள். இங்கே, SUNFO தளம் இளைஞர்களை நேரடி செயல்பாட்டிலும் தலைமைத்திறனிலும் பயிற்றுவித்து, இலங்கையிலும் உலகளாவிய அளவிலும் அவர்களை சமூக மாற்றத்தின் தலைவர் சக்தியாக உருவாக்குகிறது. இளம் தலைமுறையின் ஆர்வம் மற்றும் திறனை பயன்படுத்தி SUNFO சமூக முன்னேற்றம், சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் உலகளாவிய SDG நோக்குகளை முன்னெடுக்கிறது.

## மதிப்புகள் மற்றும் கல்வி

நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில், இளைஞர்களுக்கான வளர்ச்சி கல்வி மிகவும் முக்கியமானது. இது உலகளாவிய சவால்கள், சமூக நலன் மற்றும் சுற்றுப்புற பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இளைஞர்கள் நீதி, சமத்துவம், வேறுபாடு மதிப்பு மற்றும் ஒற்றுமை போன்ற மையக் குறியீடுகளை ஆழ்ந்த புரிதல் கொண்டதாக இருந்தால், அவர்கள் சமூக மாற்றத்தில் பொறுப்புள்ள பங்களிப்பாளர்களாக மாறுகின்றனர்.

SUNFO இளைஞர்களுக்கான கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி, உலகளாவிய குடிமகன் நெறிமுறைகளை மனதில் ஆழமாக கடைபிடித்து, சமூக நலனுக்காக செயல்படுகிறார்கள். இதன் மூலம், அவர்கள் தலைமைத்திறன், சமூக பொறுப்பு மற்றும் உலகளாவிய மாற்றங்களில் பங்கேற்கும் திறனை வளர்த்துக் கொள்கின்றனர்.

இளைஞர்கள் சமூக சேவை மற்றும் புதுமை முயற்சிகளில் உலகளாவிய அளவில், இளைஞர்கள் இந்தியா, ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சமூக புதுமை மற்றும் சமூக சேவையில் முன்னணியில் இருப்பதைப் போல, SDGYNSL இலங்கையில் இளைஞர்களை சமூக மாற்றத்தில் முன்வைக்கிறது.

## சமூக சேவை, கல்வி மற்றும் தலைமைப்பாடுகள்:

■SDG Children Parliament Induction (June 2023): புதிய பிரதிநிதிகள் BMICH இல் கலந்துகொண்டனர்.

■SDG Goal 3 Good Health & Well-being Workshops (Nov 2022): மாணவர்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் நலனுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி.

■Medicina Alternativa Summit (Nov 2019): BMICH Colombo, சமூக நலன் மற்றும் மருத்துவ விழிப்புணர்வு.

■Youth Ambassador Initiative (2015 இலங்கையின் அனைத்து 9 மாகாணங்களிலும் 1,000 இளைஞர் தலைவர்களை பயிற்சி செய்தல் மற்றும் தேசிய அருங்காட்சியக விழா, Colombo.

தேசிய மற்றும் உலகளாவிய இணைப்புகள்:

■UN Sustainable Development Cooperation Framework (UNSDCF 2023-2027): UN மற்றும் இலங்கை அரசின் இணைந்த செயல்திட்டம். 2030 SDG நோக்குகளை அடைவதில் இளைஞர்களின் பங்கு முக்கியம்.

■நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மைகள்: Central Environment Authority> Oraayam Foundation> SUNFO இவை இளைஞர்களை உள்ளூர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி, உலகளாவிய SDG நோக்கங்களுடன் இணைக்கின்றன.

இந்த செயல்பாடுகள் மூலம், DGYNSL இளைஞர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூக நலன், பெண்கள் முன்னேற்றம் மற்றும் மனித உரிமை பாதுகாப்பு ஆகிய துறைகளில் திறன், தலைமைத்திறன் மற்றும் சமூக பொறுப்பை வெளிப்படுத்தி, இலங்கையிலும் உலகளாவிய SDG முயற்சிகளில் நேரடி பங்களிப்பாளர்களாக மாறுகின்றனர்.

## உலகமயமாக்கல் மற்றும் இளைஞர்கள்

உலகமயமாக்கல் சூழலில், இளைஞர்கள் பிரத்தியேக, உள்ளூர் தேசிய, உலகளாவிய (Global) பார்வைகளை கொண்டு சமூக மாற்றத்தை முன்னெடுக்கின்றனர். இளைஞர்கள் உள்ளூர் நடவடிக்கைகளை உலகளாவிய நோக்குகளுடன் இணைத்து செயல்படுகின்றனர்.

SUNFO இளைஞர்களை உலகளாவிய மாநாடுகள் மற்றும் கூட்டமைப்புகளில் பங்கேற்க ஊக்குவிக்கிறது. Youth Co:Lab என்பது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP) மற்றும் Citi Foundation ஆகியவற்றால் 2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு முக்கியமான இளைஞர் முன்னேற்ற முயற்சி ஆகும். இது ஆசியா மற்றும் பசிபிக் மண்டலத்தில் உள்ள நாடுகளில் இளைஞர்களை சமூக மாற்றம், சமூக புதுமை மற்றும் தொழில்முனைவோராக உருவாக்குவதற்கான ஒரு பொதுவான திட்டத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம், இளைஞர்கள் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை SDGs) முன்னெடுக்க தங்களின் திறன்களை பயன்படுத்த முடியும்.

The Road to Rights என்பது இலங்கையில் அமைந்துள்ள ஒரு இளைஞர் முன்னேற்ற அமைப்பு ஆகும். இது இளைஞர்களை மனித உரிமைகள், சமூக நலன் மற்றும் நிலைத்த வளர்ச்சி நோக்கங்களில் ஈடுபடுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கின்றது. இந்த அமைப்பு, UNDP இலங்கை மற்றும் Youth Co:Lab உடன் இணைந்து, 2024 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் உரையாடல் (National Youth Dialogue 2024 நிகழ்வில் பங்கேற்றது. (https://www.youthcolab.org)

Youth Co:Lab மற்றும் The Road to Rights ஆகிய அமைப்புகள் இணைந்து, இளைஞர்களை சமூக மாற்றம் மற்றும் நிலைத்த வளர்ச்சி நோக்கங்களில் ஈடுபடுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை முன்னெடுக்கின்றன. இவை இளைஞர்களின் தலைமைத்துவம், சமூக பொறுப்பு மற்றும் உலகளாவிய மாற்றத்தில் பங்கேற்பை ஊக்குவிக்கின்றன

## தற்போதைய சமூக சேவை செயல்பாடுகள்

இலங்கையில் இளைஞர்கள் சமூக நலன், சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் சமூக மாற்றம் முன்னெடுப்பதில் முன்னணியில் இருக்கின்றனர். இவர்கள் நடத்தும் நடவடிக்கைகளில் youth-led environmental cleanups, climate strikes மற்றும் technology-driven volunteer projects குறிப்பிடத்தக்கவை.

இந்த முயற்சிகளில், Sustainable Development Goals Youth Network of Sri Lanka (SDGYNSL) இளைஞர்களின் முன்னணித் தலைமை மற்றும் செயல்திறனை வெளிப்படுத்துகிறது.

■GreenBatti Seed Balls Festival (Dec 2023): புனனை மட்டக்களப்பு அருகே 10,000 விதைகள் மற்றும் 500 மரங்கள் நடப்பட்டது. 25 சுற்றுச்சூழல் முன்னோடிகள் மற்றும் இளம் தொண்டர்கள் பங்கேற்றனர்.

■Chavakachcheri Environmental Programme: : குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான சுற்றுப்புற விழிப்புணர்வு, மரம் நடுகை இடம்பெற்றது.

■Workshops and Training Sessions: SDG Health & Well-beingமற்றும் சமூக தலைமை பயிற்சிகள் BMICH மற்றும் பிற மாகாணங்களில் நடத்தப்பட்டன.

இத்திட்டங்கள் SUNFO மற்றும் தேசிய கூட்டாளர்களான Central Environment Authority மற்றும் Oraayam Foundation மூலம் கையாளப்பட்டு உள்ளூர் நடவடிக்கைகளை உலகளாவிய SDG நோக்கங்களுடன் இணைக்கின்றன. இவை இளைஞர்களுக்கு தங்கள் திறன்களை சமூக நலனுக்காக பயன்படுத்துவதற்கும், உலகளாவிய முயற்சிகளில் நேரடியாக பங்களிப்பாளர்களாக மாறுவதற்கும் வாய்ப்பு தருகின்றன.

## இளைஞர்களின் எதிர்காலம்

உலகம் எதிர்கொள்ளும் பல சவால்களை சமாளிப்பதில் இளைஞர்கள் முக்கிய சக்தியாக உள்ளனர். அவர்களின் திறன், ஆர்வம் மற்றும் சிந்தனை திறனை மேம்படுத்துவதில் முதலீடு செய்யும் போது, சமூக மாற்றம் மற்றும் நிலைத்த வளர்ச்சி நோக்குகள் விரைவாக முன்னேற முடியும். இது ஒரே நேரத்தில் உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய அளவில் செயல்பட வேண்டிய தேவையை உருவாக்குகிறது.

2030 இலக்குகளை அடைய, தேசிய மற்றும் உலகளாவிய முயற்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அரசாங்கங்கள், NGOs, பல்துறை கூட்டாண்மைகள் மற்றும் உலகளாவிய அமைப்புகள் இளைஞர்களின் சக்தியுடன் இணைந்து பணியாற்றி, அவர்களின் திறன்களை பயிற்சி, கல்வி, தலைமைத்திறன் மற்றும் சமூக பங்களிப்பில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

இன்றைய இளைஞர்களின் ஈடுபாடு 2030 இலக்குகளை அடைவதில் தீர்மானமாகும். SUNFO மற்றும் உலகளாவிய இளைஞர் கூட்டமைப்புகளில் பங்கேற்பது மூலம், இளைஞர்கள் உள்ளூர் மற்றும் உலகளாவிய மாற்றங்களில் நேரடி பங்களிப்பாளர்களாக மாற முடியும். இளைஞர்களை ஊக்குவித்து, அவர்களின் திறனை உலகளாவிய வளர்ச்சி முயற்சிகளில் பயன்படுத்துவதன் மூலம், சமூக நலனையும், சுற்றுப்புற பாதுகாப்பையும், சமுதாய ஒற்றுமையையும் ஒரே நேரத்தில் முன்னெடுக்க முடியும். இப்போது செயல்பட்டு எதிர்காலத்தை உருவாக்குவதே நமது பொறுப்பு.

2025/2026 காலத்திற்கு, Sustainable Development Goals Youth Network of Sri Lanka (SDGYNSL) இல் SUNFO GLOBAL FEDRATION ஊடாக இலங்கைக்கு தேசிய ஒருங்கிணைப்பாளர், மாகாண ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் 27.07.2025யில் BMICH நியமிக்கப்பட்டனர். இந்த பொறுப்பில், ஆர்வமுள்ள இளைஞர் தலைவர்களுடன் இணைந்து 2030 நிலைத்த வளர்ச்சி திட்டத்தை முன்னெடுத்து, சமூகங்களில் நிலைத்த மாற்றத்தை உருவாக்க முனைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், SDGYNSL இளைஞர்கள் தங்கள் திறன், படைப்பாற்றல் மற்றும் தலைமைத்திறன் கொண்டு இலங்கையிலும் உலகளாவிய SDG நோக்கங்களிலும் நேரடியாக பங்களிப்பாளர்களாக மாறுகின்றனர். இது அனைவருக்கும் ஒட்டுமொத்தமாக, இணைந்த மற்றும் சக்திவாய்ந்த சமூக எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியாகும்.

நாம் இன்று எதிர்கொள்ளும் வறுமை, வேலைவாய்ப்பு பற்றாக்குறை, சமூக அசமநிலை, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள், நாளைய உலகிற்கு வாய்ப்புகளையும் சவால்களையும் உருவாக்குகின்றன. இளைஞர்கள் இச்சவால்களை புதிய எண்ணங்கள், புத்திசாலித்தனம் மற்றும் செயல் திறன் மூலம் சிந்தித்து, மாற்றத்தை உருவாக்கும் சக்தியுள்ளவர்கள்.

இவற்றை SUNFO போன்ற அமைப்புகள் இங்கு மிகவும் முக்கிய பங்காற்றுகின்றன. இவை இளைஞர்களை உலகளாவிய மற்றும் உள்ளூர் வளர்ச்சி முயற்சிகளுடன் இணைத்து, அவர்களின் திறன்கள் மற்றும் ஆர்வத்தை சமூக நலன், சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் சமுதாய ஒற்றுமைக்கு வழிமாற்றுகின்றன. இளைஞர்களின் தலைமைத்திறன், சமூக பங்களிப்பு மற்றும் உலகளாவிய செயற்பாடுகள் 2030 இலக்குகளை அடைவதில் தீர்மானமாகும். சமூக நீதியும், நிலைத்த வளர்ச்சியும், அமைதியும் நிரந்தரமாக நிலைக்க, இளைஞர்களை ஊக்குவித்து அவர்களின் திறன்களை முழுமையாக பயன்படுத்துவது அவசியம். இன்று நாம் எடுத்த நடவடிக்கைகள் நாளைய உலகின் வளமான, சமநிலைமிக்க, நியாயமான எதிர்காலத்தை உருவாக்கும்.

வொஷிங்டன்

# வெனிசுலாவை குறிவைக்கும் அமெரிக்கா



கரீபியன் கடலில் திடீரென போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. உலகின் மிகப்பெரிய எண்ணெய் இருப்புகளைக் கொண்ட வெனிசுலாவை குறிவைத்து அமெரிக்கா தனது இராணுவப் படைகளை பெரிய அளவில் நகர்த்தி வருகிறது.

அதிநவீன போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் F 35 போர் விமானங்களை வெனின்சுலாவை நோக்கி அமெரிக்க இராணுவம் நகர்த்தி வருவதாக தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன.

இதனால் வெனிசுலா எந்த நேரத்திலும் தாக்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வெனிசுலாவிலிருந்து போதைப்பொருள் கும்பல்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதாகவும், இந்த இராணுவ நடவடிக்கை அவற்றை அடக்குவதாகவும் அமெரிக்க ட்ரம்ப் நிர்வாகம் கூறுகிறது.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு இந்த போதைப்பொருள் மாஃபியாவுடன் நேரடி தொடர்பு இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்நது கூறி வருகிறார்.

அது மட்டுமல்லாமல், மதுரோவின் இருப்பிடம் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 50 மில்லியன் டொலர் (சுமார் ரூ.430 கோடி) வெகுமதியையும் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

மேலும், "மதுரோ அரசாங்கத்தின் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன" என்று ட்ரம்ப் சமீபத்தில் சமூக ஊடகங்களில் நேரடியாக எச்சரித்தது குறிப்பிடத்தக்கது.



மாஸ்கோ

# புற்றுநோய் தடுப்பூசி சந்தைக்கு வருகிறது

புற்றுநோய் தடுப்பூசி ரஷ்யா உருவாக்கி உள்ள புற்றுநோய்க்கான தடுப்பூசி விரைவில் சந்தையில் அறிமுகமாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

உயிர்க்கொல்லி நோய்களில் ஒன்றான புற்றுநோயால் ஆண்டுதோறும் உலக அளவில் கோடிக் கணக்கான பேர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்தச் சூழலில் புற்றுநோய்க்கான எம்ஆர்என்ஏ தடுப்பூசியை உருவாக்கி உள்ளதாக ரஷ்ய நாட்டின் சுகாதாரத் துறையின் கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மைய இயக்குநர் ஆண்ட்ரே கப்ரின் கடந்த ஆண்டு இறுதியில் தெரிவித்திருந்தார்.

இந்த தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனையில், புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதை செலுத்தினால் கட்டி (ட்யூமர்) வளர்வதை தடுக்கப்படுவதை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். மேலும், இது பல கட்ட சோதனைகளுக்குப் பிறகு மனிதர்களிடத்திலும் சோதிக்கப்பட்டுள்ளது. அதற்கான செயல்திறன் 100 சதவீதம் துல்லியமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது பயன்பாட்டுக்கு பாதுகாப்பானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசி 'என்ட்ரோமிக்ஸ்' என அறியபப்டுகிறது. ஏற்கெனவே ரஷ்யா உருவாக்கிய எம்ஆர்என்ஏ கரோனா தடுப்பூசி பணிகள் இந்த முயற்சிக்கு கைகொடுத்துள்ளது.

வொஷிங்டன்

# ஹமாஸூக்கு ட்ரம்ப் கடைசி எச்சரிக்கை



ஹமாஸ் அமைப்புக்கு என்னுடைய கடைசி எச்சரிக்கை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தள்ளார்.

இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது.

மேலும், நோவா இசை நிகழ்ச்சியில் பங்கேற்க சென்றவர்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், 250க்கும் மேற்பட்டோர் பணய கைதிகளாக சிறை பிடித்து செல்லப்பட்டனர்.

21 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசா பகுதியில் 63 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 இலட்சத்த்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

எனினும், இவர்களில் எத்தனை பேர் பொதுமக்கள் என்றோ அல்லது வீரர்கள் என்றோ விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை. நாங்கள் பயங்கரவாதிகளையே இலக்காக கொண்டு தாக்குதல் நடத்துகிறோம் என இஸ்ரேல் கூறுவதுடன், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் ஹமாஸ் அமைப்பினர் செயல்படுகின்றனர் என்றும் அதனால், பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்றும் குற்றச்சாட்டாக கூறியுள்ளது.

அத்துடன், போரை முடிவுக்கு கொண்டு வர மற்றும் பணய கைதிகளை விடுவிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்புக்கு என்னுடைய கடைசி எச்சரிக்கை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தள்ளார்.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், பணய கைதிகள் வீடு திரும்ப வேண்டும் என ஒவ்வொருவரும் விரும்புகின்றனர்.

இந்த போர் முடிவுக்கு வரவேண்டும் என ஒவ்வொருவரும் விரும்புகின்றனர். இஸ்ரேல் அரசு என்னுடைய விதிமுறைகளை ஏற்று கொண்டது. ஹமாஸ் அமைப்பும் இதனை ஏற்று கொள்ள வேண்டிய தருணம் வந்துள்ளது. அப்படி ஏற்று கொள்ளவில்லையென்றால், விளைவுகளை பற்றி ஹமாஸ் அமைப்புக்கு நான் எச்சரிக்கை விடுத்து இருக்கிறேன்.

இது என்னுடைய கடைசி எச்சரிக்கை. மற்றொரு முறை எச்சரிக்க மாட்டேன். இந்த விவகாரத்தில் கவனம் செலுத்தியதற்காக உங்களுக்கு நன்றி என தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

# இந்திய துணை ஜனாதிபதி தெரிவுக்கு இன்று வாக்களிப்பு




இந்தியாவின் துணை ஜனாதிபதியாக இருந்த ஜெகதீப் தன்கர் இராஜினாமா செய்த்தையடுத்து, 17ஆவது துணை ஜனாதிபதி பதவிக்கான வாக்களிப்பு இன்று செவ்வாய்க்கிழமை (09) நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலை முன்னிட்டு ஆளும் பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் வேட்பாளராக, தமிழகத்தைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டார். இவரை எதிர்த்து எதிர்க்கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணி சார்பில் சுப்ரீம் கோர்ட்டு முன்னாள் நீதிபதி பி.சுதர்சன் ரெட்டி வேட்பாளராக களம் இறக்கப்பட்டார்.

இந்தநிலையில், இருமுனைப் போட்டி உறுதியானதை தொடர்ந்து இரு தரப்பினரும் ஆதரவு திரட்டும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்புபடி, பாராளுமன்ற இரு அவைகளின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 788 ஆகும். தற்போது மாநிலங்களவையின் 245 உறுப்பினர் இடங்களில் 5 இடங்கள் காலியாக உள்ளன. மக்களவையின் 543 இடங்களில் ஒரு இடம் வெற்றிடமாக உள்ளது. இதனால் தற்போது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 782 ஆக காணப்படுகின்றது. இதில் ஆளும் கட்சியான பா.ஜனதாவுக்கு மக்களவையில் 240 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 99 உறுப்பினர்களும் உள்ளனர். இவர்களுடன் கூட்டணி கட்சி உறுப்பினர்களையும் சேர்த்தால் 450-க்கு மேல் வரும். இதனால் வெற்றி வாய்ப்பு பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பிரகாசமாக இருக்கிறது என்பது வெளிப்படையாக தெரிகிறது.



சிம்பாப்வேவுக்கு எதிரான

# தொடரை இலங்கை கைப்பற்றியது

சிம்பாப்வேக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இலங்கையும், இரண்டாவது போட்டியை சிம்பாப்வேயும் வென்றிருந்த நிலையில், ஹராரேயில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என்ற ரீதியில் தொடரை இலங்கை கைப்பற்றியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சிம்பாப்வே, தடிவனஷே மருமனியின் 51 (44), அணித்தலைவர் சிகண்டர் ராசாவின் 28 (18), றயான் பேர்ளின் 26 (15), ஷோன் வில்லியம்ஸின் 23 (11), தஷிங்கா முசெகிவாவின் 18 (11), டொனி முயொங்காவின் ஆட்டமிழக்காத 13 (09), பிரயன் பென்னிட்டின் 13 (08) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், துஷான் ஹேமந்த 4-0-38-3, துஷ்மந்த சமீர 4-0-33-2, சரித் அசலங்க 3-0-19-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 192 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, கமில் மிஷாரவின் ஆட்டமிழக்காத 73 (43), குசல் பெரேராவின் ஆட்டமிழக்காத 46 (26), பதும் நிஸங்கவின் 33 (20), குசல் மெண்டிஸின் 30 (17) ஓட்டங்களோடு 17.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ராசா 4-0-29-1, பிராட் இவான்ஸ் 3-0-28-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மிஷாரவும், தொடரின் நாயகனாக சமீரவும் தெரிவாகினர்.



# தென்னாபிரிக்காவை சுருட்டிய இங்கிலாந்து

தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து வரலாற்று வெற்றி பெற்றது.

சௌதாம்டனில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இங்கிலாந்து, ஜேக்கப் பெத்தெலின் 110 (82), ஜோ றூட்டின் 100 (96), ஜேமி ஸ்மித்தின் 62 (48), ஜொஸ் பட்லரின் ஆட்டமிழக்காத 62 (32), பென் டக்கெட்டின் 31 (33), வில் ஜக்ஸின் ஆட்டமிழக்காத 19 (08) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 414 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 415 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஜொப்ரா ஆர்ச்சர் (4), பிறைடன் கார்ஸ் (2), அடில் ரஷீட்டிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களையே பெற்று 342 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்தவகையில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மிகப் பெரிய ஓட்ட வித்தியாசத்தில் பெறப்பட்ட வெற்றியாக இது பதிவாகியது. முன்னர் இலங்கைக்கெதிராக இந்தியா 317 ஓட்டங்களால் வென்றமையே அதிக ஓட்டங்களால் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பெறப்பட்ட வெற்றியாகக் காணப்பட்டிருந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஆர்ச்சரும், தொடரின் நாயகனாக றூட்டும் தெரிவாகினர்.

# இன்று ஆரம்பிக்கிறது ஆசியக் கிண்ணம்

ஆசியக் கிண்ணத் தொடரானது, ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள ஆப்கானிஸ்தான், ஹொங் கொங்குக்கிடையிலான குழு பி போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

குழு பியில் ஆப்கானிஸ்தான், ஹொங் கொங் தவிர இலங்கை, பங்களாதேஷும் இடம்பெற்றுள்ளன.

குழு ஏயில் நடப்புச் சம்பியன்களான இந்தியா, பாகிஸ்தான்,ஓமான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகியன காணப்படுகின்றன.

ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் மோதி, இரண்டு குழுக்களிலும் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும். சுப்பர் 4 சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் விளையாடி முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.ை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



கிழக்கு பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி:

# முதலிடம் பெற்ற பட்டிருப்பு வலயம்

## களுதாவளை தேசிய பாடசாலை 77 புள்ளிகளைப் பெற்றது

வ. சக்தி

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பட்டிருப்பு கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்றது.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மாதானத்தில் புதன்கிழமை (03) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (07) முடிவுக்கு வந்த இப்போட்டிகளில் 148 புள்ளிகளைப் பெற்றே பட்டிருப்பு வலயம் முதலிடத்தைப் பெற்றது.

பட்டிருப்பு கல்வி வலயம் சார்பில் களுதாவளை தேசிய பாடசாலை 77 புள்ளிகள், செட்டிபாளையம் மகா வித்தியாலயம் 37 புள்ளிகள், மண்டூர்-13 விக்னேஸ்வரா மகா வித்தியாலம் 11 புள்ளிகள், மண்டூர்-14 சக்தி மகா வித்தியாலம் 11 புள்ளிகள், பழுகாமம் கண்டுமனி மகா வித்தியாலம் 05 புள்ளிகள், தேற்றாத்தீவு மகா வித்தியாலம் 04 புள்ளிகள், தும்பங்கேனி மகா வித்தியாலம் 01 புள்ளி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலம் 01 புள்ளி, குருமன்வெளி சக்தி மகா வித்தியாலம் 01 புள்ளியையும் பெற்றுப் கொடுத்துள்ளன.

இம்முறை களுதாவளை தேசிய பாடசாலை சார்பில் இரண்டு மாகாண புதிய சாதனைகளும் மற்றும் ஒரு சாதனையும் மாணவர்களால் சமப்படுத்தப்பட்டிருந்தது.

16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த மெய்வல்லுநர் வீரராக களுதாவளை தேசிய பாடசாலையை சேர்ந்த 194 சென்றி மீற்றர் பாய்ந்து புதிய சாதனை படைத்த கு. பகிர்ஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பெண்கள் பிரிவில் 65 புள்ளிகளுடன் களுதாவளை தேசிய பாடசாலை மாகாணத்தில் முதலிடம் பெற்றுக்கொண்டது.

ஒட்டுமொத்தமாக 77 புள்ளிகளுடன் தொடர்ந்து மாகாணத்தில் களுதாவளை மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை இம்முறை முதலிடம் பெற்றுக் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இப்போட்டிகளில் இரண்டாமிடத்தை 128 புள்ளிகளைப் பெற்று அக்கரைப்பற்று கல்வி வலயமும், மூன்றாமிடத்தை 119 புள்ளிகளைப் பெற்று மகோயா கல்வி வலயமும் பெற்றுக் கொண்டுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 09, செப்டெம்பர் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.